இலஞ்சம் தவிர்
களம் -21

நெஞ்சம் நிமிர்
வெற்றி -11

# நேர்மை நெறி

நவம்பர் 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

## (NERMAI NERI)

(REG.NO.349/2001)

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

₹ 10

## ஊழலை முளையிலேயே நசுக்க வேண்டும், ஏனெனில் அது தேசத்தின் நெறிமுறைகளையே நசுக்கும்



## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம்:
155, “நம்பகம்”, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாபுரம், சென்னை-600023
தொலைபேசி எண்: 044 2674 1007
e-mail : acmchennai2001@yahoo.co.in
website : anticorruptionchennai.com

## நேர்மையானவர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### மதிய உணவுத்திட்டம்

பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தை ஆரம்பித்தவர், பெருந்தலைவர் காமராஜர்.

ஒரு சமயம், மகாகவி சுப்ரமணிய பாரதி பிறந்த ஊரான எட்டயாபுரத்தில், எட்டயாபுர மன்னரின் முன்னிலையில் காமராஜர் அந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கச் சென்று கொண்டிருந்தார். அவருடன் சில அதிகாரிகளும் சென்றனர்.

அவர்களில் ஒருவன் காமராஜரிடம், "மிகவும் பெருமைத்தக்க ஒரு திட்டத்தைத் தாங்கள் தொடங்க இருக்கிறீர்கள். ஆனால், இத்திட்டத்துக்கு நம்மிடம் உள்ள நிதி நிலைமை சரியாக வருமா? பல லட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு போட முடியுமா?" என்று கேட்டார்.

அதைக் கேட்டுப் புன்னகைத்த காமராஜர், "பிள்ளைப்பசி கொள்ளித் தேள் என்பார்கள். தேளை வயிற்றில் வைத்துக்கொண்டு குழந்தைகள் எப்படிப் படிப்பார்கள்? வயிறு நிறைந்தால் தானே சிந்தனையோ , படிப்போ வரும். இந்த மதிய உணவுத்திட்டம் காந்திஜி கண்டவழி. இந்த வழியை நான் பின்பற்றியே தீருவேன். நிதி இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்பட மாட்டேன். நாட்டு மக்களிடம் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்தாவது நிதி திரட்டி ,ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்தே தீருவேன்!" என்று உறுதியுடன் கூறினார்.

அவரது உறுதியை கண்ட அத்தனை அதிகாரிகளும் பிரமித்து நின்றனர்.



## தேர்தல் பத்திரம் (இந்தியா)- உச்ச நீதிமன்றத்தில் மனு

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

**தேர்தல் பத்திரம்** (**Electoral bond**) என்பது அரசியல் கட்சிக்கு அல்லது தனிநபர்களுக்கு நன்கொடை செலுத்த விரும்பும் ஒரு இந்தியக் குடிமகன் அல்லது இந்தியாவில் இணைக்கப்பட்ட நிறுவனம், பாரத ஸ்டேட் வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளிலிருந்து வாங்கக்கூடிய ஒரு *உறுதிமொழி பத்திரம்* (**Promissory note**) போன்றது. இந்தியக் குடிமகன் அல்லது ஒரு நிறுவனம் விரும்பும் தகுதியுள்ள அரசியல் கட்சிக்கும் இத்தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக வழங்கலாம். தேர்தல் பத்திரங்கள் வங்கிப் பணத்தாள்கள் போன்றதே. இப்பத்திரங்களுக்கு வட்டி கிடையாது. ஒரு தனிநபர் அல்லது ஒரு நிறுவனம் இந்த பத்திரங்களை டிஜிட்டல் முறையில் அல்லது காசோலை மூலம் வாங்க அனுமதிக்கப்படும்.[2]

தேர்தல் பத்திரங்கள் நிதி மசோதா (2017) படி, இந்திய அரசு 2 சனவரி 2018 அன்று வெளியிட்ட அரசாணை மூலம் தேர்தல் பத்திரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்தல் பத்திரங்கள் ரூபாய் 1,000, 10,000, 1,00,000 மற்றும் 1 கோடி மதிப்புகளில் பாரத ஸ்டேட் வங்கியால் வெளியிடப்படுகிறது. இத்தேர்தல் பத்திரங்கள் பாரத ஸ்டேட் வங்கியின் புது தில்லி, காந்திநகர், சண்டிகர், பெங்களூரு, போபால், மும்பை, ஜெய்ப்பூர், லக்னோ, சென்னை, கொல்கத்தா மற்றும் கவுகாத்தி போன்ற 29 கிளைகளிலும் பணம் செலுத்தி, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை செலுத்துவர்கள் பெறலாம்.

தேர்தல் பத்திரம் வாங்கிய நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். தேர்தல் பத்திரங்கள் ஒவ்வொரு காலாண்டின் தொடக்கத்தின் 10 நாட்களுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் விற்கப்படுகிறது. இந்திய மக்களவைத் தேர்தல் ஆண்டில் மட்டும் 30 நாட்கள் தேர்தல் பத்திரங்கள் கூடுதலாக விற்பனைக்கு உள்ளது.

தேர்தல் பத்திரம் நன்கொடையாக பெற தகுதிகள்

- மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951 (1951 இன் 43) பிரிவு 29A இன் கீழ் பதிவு செய்யப்பட்டு, சமீபத்திய பொதுத் தேர்தல்கள் அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் குறைந்தது ஒரு சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல் பத்திரங்களை நன்கொடையாகப் பெற தகுதியுடையவர்கள்.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வங்கிக் கணக்குகளுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் நன்கொடையாக செலுத்த முடியும்.
- தேர்தல் பத்திரங்களில் நன்கொடையாளரின் பெயர் இருக்காது. இதனால், நன்கொடையாளரின் அடையாளத்தை அரசியல் கட்சி அறிய முடியாது. தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக செலுத்துபவர் மற்றும் பெறும் அரசியல் கட்சிகளுக்கு வருமான வரி விலக்கு கிடைக்கும்.

தேர்தல் பத்திரம் அறிமுகத்தின் காரணம்

நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசுத் திட்டத்தின் படி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை தருபவர்களின் விவரங்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தாமல், ஒரு கட்சிக்கு அளிக்கப்பட்ட அனைத்து நன்கொடைகளும் இருப்புநிலைக் கணக்குகளில் கணக்கிடப்படுவதை உறுதி செய்வதற்காக தேர்தல் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேர்தல் பணப் பத்திரங்கள், கறுப்புப் பணத்தை தேர்தலுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்கும் என்று இந்திய அரசு சொல்கிறது

விமர்சனங்கள்

- அதிக வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவருவதற்காக தேர்தல் பத்திரங்கள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், அத்தகைய நன்கொடைகளின் விவரங்களை பொதுவில் வெளியிடுவதை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.
- தேர்தல் பத்திரத்தை வாங்குபவர் அல்லது நன்கொடை பெறும் அரசியல் கட்சி நன்கொடையாளரின் அடையாளத்தை வெளிப்படுத்த தேவையில்லை என்பதால், ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்கள் நிறுவனத்தின் பங்களிப்பை அறியாமல் இருப்பார்கள்.
- ஒரு அரசியல் கட்சிக்கு எப்படி, யார் மூலம் நிதி வழங்கப்பட்டது என்பது பற்றி வாக்காளர்களுக்கு தெரியாது. தேர்தல் பத்திரத் திட்டத்தை எதிர்ப்பவர்கள்,

நன்கொடையாளரின் அடையாளத்தை இரகசியமாக வைத்திருப்பதால், அது கருப்புப் பணத்தின் வரவுக்கு வழிவகுக்கும் என்று வாதிடுகின்றனர்.

- இந்த திட்டம் பெரிய நிறுவனங்கள் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் பணத்தை நன்கொடையாக வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர்.
- சிவில் உரிமைகள் சமூகங்களின் கூற்றுப்படி, நன்கொடையாளர் "இரகசியம்" என்ற கருத்து ஜனநாயகத்தின் ஆவிக்கு அச்சுறுத்தலாக உள்ளது. தேர்தல் பத்திரங்கள் மூலம் செலுத்தப்படும் நன்கொடைகள் பணமோசடிக்கு சமம் என்று இந்திய தேசிய காங்கிரசு கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தல் பத்திரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு நீக்கப்பட்ட கட்டுப்பாடுகள்

1. முன்னதாக, நிறுவன சட்டத்தின் கீழ் எந்த வெளிநாட்டு நிறுவனமும் எந்த அரசியல் கட்சிக்கும் நன்கொடை அளிக்க முடியாது.
2. நிறுவனங்கள் சட்டப் பிரிவு 182 இன் படி ஒரு நிறுவனம் தனது சராசரி மூன்று வருட நிகர லாபத்தில் அதிகபட்சமாக 7.5% அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடைகளாக வழங்கலாம். ங
3. இச்சட்டத்தின் அதே பிரிவின்படி, நிறுவனங்கள் தங்கள் வருடாந்திர கணக்கு அறிக்கையில் தங்கள் அரசியல் நன்கொடைகளுக்கு வழகப்பட்ட் நன்கொடை விவரங்களை வெளியிட வேண்டும்.
4. தேர்தல் நிபந்தனைகளில் இந்த நிபந்தனை நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்பதை உறுதி செய்வதற்காக இந்திய அரசு நிதி மசோதாவில் உரிய திருத்தம் கொண்டு வந்தது. இதனால் இந்திய, வெளிநாட்டு மற்றும் ஷெல் நிறுவனங்கள் கூட பங்களிப்பை யாரிடமும் தெரிவிக்காமல் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கலாம்

**மொத்த நன்கொடைகள்**

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில், பாஜகவுக்கு ரூ. தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடையாக 5,271 கோடிகள், இதுவரை (ரூ. 5271,97,58,000), காங்கிரஸ் ரூ. 952 கோடிகள் (ரூ. 952,29,56,000). பிராந்திய கட்சிகளில், பிஜு ஜனதா தளம் ரூ.622 கோடிக்கும், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சிக்கு ரூ. 330 கோடிகள் (ரூ. 330,44,00,000).

**நவம்பர் 3ன் இடைக்கால தீர்ப்பு**

அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்ற நிதி குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களை இரண்டு வாரங்களுக்குள் அளிக்குமாறு இந்திய தேர்தல் ஆணையத்துக்கு ( இசிஐ ) உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது. இந்திய தலைமை நீதிபதி (CJI) DY சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, பிஆர் கவாய், ஜேபி பர்திவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய பெஞ்ச், இரண்டு வாரங்களுக்குள் தரவுகளை சீல் செய்யப்பட்ட பாக்கெட்டில் சமர்ப்பிக்க ECI க்கு உத்தரவிட்டது.

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு வெ **அய்யப்பன், துணைத்**தலைவர் : **75501 82438**

திரு **V** கார்த்திகை ராஜன்**,** பொதுச்செயலாளர் : **87783 12823**

திருமதி பாக்யலட்சுமி**,** மேலாளர் : **90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**

**Website : anticorruptionchennai.com**

# <u>கார்ப்பரேட்களுக்கு 25 லட்சம் கோடி கடன் தள்ளுபடி!</u>

நூறு நாள் வேலை திட்டத்தில் விவசாயக் கூலிகளுக்கு பணமில்லை என சொல்லும் பாஜக அரசு, வங்கியில் உள்ள மக்களின் சேமிப்புக்களையும், மக்களை வாட்டி வதைத்து வாங்கும் வரிப் பணத்தையும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு கடனாக கொடுத்து அதை வாராக்கடனாக தள்ளுபடி செய்துள்ளதை விளக்கும் கட்டுரை;

- இந்தியாவில் பல்வேறு திட்டங்களுக்கு பணம் இல்லை.
- நூறு நாள் வேலை செய்தவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் பல மாதங்களாக போராட்டம் செய்து வருகிறார்கள்.
- மாநில அரசுகளுக்கு கொடுக்கவேண்டிய பங்கீடு தொகை உரிய காலங்களில் வழங்கபடாமல் இருக்கிறது.
- மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு ரூ. 1,500 கோடி கூட கொடுக்க இயலாமல், ஜப்பான் நாட்டில் கடன் வாங்கி கட்ட சொல்கிறது.
- மாணவர்களின் கல்விக்கடனுக்கும் விவசாயிகளின் கடன்களையும் அல்லது குறைந்த பட்சம் அந்த வட்டிகளை தள்ளுபடி செய்ய கோரிக்கை வைத்தால் நிராகரிக்கிறது ஒன்றிய அரசு..!

CAG அறிக்கையில் 7.5 லட்சம் கோடி அளவுக்கு முறைகேடுகள் நடந்திருக்கிறது அன்று கூறிய பின்னர் அந்த முறைகேட்டை பற்றி எதுவும் பேசாமல் அந்த அறிக்கையை சமர்ப்பித்த அதிகாரிகளைப் பந்தாடி வருகிறது.






பல இடங்களில் இந்த CAG தணிக்கை துறை அதிகாரிகளை ஆய்வு செய்யும் இடங்களுக்கு செல்லவேண்டாம் என்று வாய்வழியாக உத்தரவு பிறப்பித்து முறைகேடுகளை வெளிக் கொணராமல் முடக்க பார்க்கிறது.

ஒரு பக்கம் கடுமையான வரி, இன்னொரு பக்கம் பெட்ரோல் டீசல் கேஸ் விலை ஏற்றத்தின் காரணமாக விலைவாசி ஏறி நிற்கிறது. மறுபக்கம் மோடியின் செல்லப்பிள்ளை அதானியின் நிறுவனம் நிலக்கரி இறக்குமதி மூலம் கொள்ளை லாபம் வைத்து அரசுக்கு விற்பனை செய்கிறது. இப்படி விலை அதிகமான நிலக்கரியை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மின்சாரத்தின் விலை ஏறி, பல்வேறு தொழில்கள் நசுங்கும் நிலையில் இருக்கிறது. இப்படி எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருப்பதால் ரூபாயின் மதிப்பு மிகவும் வீழ்ச்சி அடைந்து இருக்கிறது.


கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் 07-08-2023 அன்று நாட்டில் நிலவும் வாராக்கடன் பற்றிய கனிமொழி கருணாநிதி, பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் கேள்வி எண் 2983 க்கு பதிலளித்து பேசிய டாக்டர் பகவத் கராத், ஒன்றிய துணை நிதி அமைச்சர் அளித்த பதிலுக்கும் இப்போது தகவல் அறியும் சட்டம் மூலம் பெறப்பட்ட பதிலுக்குமே வித்தியாசம் இருக்கிறது.

இதில் வெட்கக்கேடான விஷயம் என்னவென்றால், எவ்வளவு தொகை பெருமுதலாளிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விபரத்தை மத்திய ரிசர்வ் வங்கி தனியாக பேணிக்கவில்லை என்று பதில் அளித்து இருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் பாராளுமன்றத்தை தவறாக வழி நடத்தியதாக உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப நம் பாராளுமன்ற உறுபினர்கள் முன் வரவேண்டும்.

இப்படியான ஓர் அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைத்த நிதித்துறை அமைச்சகம், இப்போது கேரளா மாநிலம் ஆழப்புழையில் பிறந்த சஞ்சய் ஈழவா, தற்போது குஜராத் மாநிலத்தில் சமூக போராளியாக இருப்பவர் தகவல் உரிமை சட்டத்தின் மூலம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் எவ்வளவு வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது என்ற கேள்விக்கு மத்திய ரிசர்வ் வங்கி பதில் கொடுத்து இருக்கிறது.

இந்த கேள்விகளுக்கு ரிசர்வ் வங்கி அளித்த பதில், நம் நாடு எவ்வளவு வெளிப்படைத்தன்மையோடு இருக்கிறது என்ற கேள்விக்கு விடை தெரியாமல் தள்ளாடும் நிலை இருக்கிறது.

வசூல் ராஜா MBBS எனும் திரைபடத்தில் கமலஹாசன் பதில் தெரியாதவர்களிடம் கேள்வி கேட்டால் பரவாயில்லை. கேள்வியே புரியாதவரிடம் கேள்வி கேட்கிறீர்களே என்பதை போல தெளிவாக கேள்விகளை வைத்த பின்னரும் அதற்கு பதிலாக உங்கள் கேள்வி புரியவில்லை என்ற அடிப்படையில் சில கேள்விகளுக்கு பதில் அளித்திருக்கிறார்கள். இப்படி தகுதியற்றவர்களை வைத்து தான் நம் மத்திய ரிசர்வ் வங்கி இயங்குகிறது என்பதை பதில் எண் 7 மற்றும் 8 லே புரிந்து கொள்ளலாம்.





இந்த பதில்களை விட இன்னும் வியப்பூட்டும் விதத்தில் இதற்கு முன்னரான அரசாங்கம் எவ்வளவு தள்ளுபடி செய்திருக்கிறது என்ற கேள்விக்கு இந்த தரவுகளே இல்லை என்று பதிலளித்து இருக்கிறார்கள். இப்படியான நிலையில் TRANSPARANT வெளிப்படைத்தன்மையான அரசாங்கத்தில் நாம் இருக்கிறோம். இப்படியாக இதுவரையில் எந்த ஒரு கேள்விக்கும் முறையான விளக்கமோ பதிலோ இல்லாத இந்த அரசாங்கம்.

- **PMCARES பற்றி கேட்டால் அதற்கு பதில் இல்லை.**
- **ELECTORAL BOND பற்றி கேட்டால் அதற்கு பதில் இல்லை.**

இப்போது மொத்தமாக சில கேள்விகளை பாராளுமன்றத்திலும் தகவல் உரிமை சட்டத்தின் வாயிலாகவும் கேட்டு பெறப்பட்ட தகவல்கள் அப்பட்டமான விதிமுறை மீறல்கள் இருப்பதோடு, பொதுமக்களின் வரிப்பணம் சூறையாடப்பட்டு இருப்பது கண்கூடாக தெரிகிறது. கடந்த 9 ஆண்டுகளில் தனியார் முதலாளிகளுக்கு மோடி அரசு கடன் கொடுத்து, வாராக்கடன் எனும் கணக்கில் தள்ளுபடி செய்த தொகை மட்டுமே ரூ. 25 லட்சம் கோடிகள். (**ரூபாய் கோடிகளில்).** இப்படி சராசரியாக ஆண்டுக்கு 2.5 லட்சம் கோடிகள் வராக் கடனாக மட்டும் தள்ளுபடி செய்து கொண்டு இருக்கிறது. மேலே இருக்கும் விபரம் சென்ற நிதியாண்டு வரைக்கும் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை. இந்த நிதியாண்டில் என்ன எல்லாம் செய்ய இருக்கிறார்களோ தெரியாது.

பொதுவாக வங்கிகள் தொழில் செய்வதற்கு கடன் கொடுக்கிறது. இப்படி வழங்கப்படும் கடன்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது. ஒன்று பிணையுடன் கூடிய கடன் (SECURED LOAN) இன்னொன்று பிணையில்லா கடன் (UNSECURED LOAN).

சாதாரணமாக சிறுகுறு நிறுவனங்கள் கடன் கேட்டால் அதற்கு எந்த சொத்தை ஈடுகடனாக எழுதி வைப்பீர்கள் என்று கேட்டு அந்த சொத்தின் மதிப்பை மதிப்பீடு செய்து தான் தருவார்கள். நாளை ஏதேனும் காரணங்களால் அந்த கடனை கட்ட முடியாவிட்டால் அந்த சொத்தினை ஜப்தி செய்து ஏலம் விட்டு அதில் வரும் பணத்தின் மூலம் அந்த கடன்

தொகையில் வரவு வைப்பார்கள். அப்படி இருக்கும்பட்சத்தில் பிணை இன்றி வழங்கப்பட்ட கடன் வசூலிக்க இயலாமல் இருந்து அது தள்ளுபடி வரை சென்று இருக்கிறது.

| **வருடம்** | **பொதுத்துறை வங்கிகள்** | **வணிக வங்கிகள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| **2014-15** | **49,010** | **58,786** | **1,07,796** |
| **2015-16** | **57,585** | **70,413** | **1,27,998** |
| **2016-17** | **81,683** | **1,06,373** | **1,88,056** |
| **2017-18** | **1,28,229** | **1,61,323** | **2,89,552** |
| **2018-19** | **1,83,202** | **2,36,265** | **4,19,467** |
| **2019-20** | **1,75,877** | **2,34,170** | **4,10,047** |
| **2020-21** | **1,31,894** | **2,02,781** | **3,34,675** |
| **2021-22** | **1,15,536** | **1,74,966** | **2,90,502** |
| **2022-23** | **1,18,950** | **2,08,037** | **3,26,987** |
| **மொத்தம்** | **10,41,966** | **14,53,114** | **24,95,080** |


Annex

Lok Sabha unstarred question no. 2983, regarding Corporate Loan

Loan written-off by Scheduled Commercial Banks

Amounts in crore Rs.

| FY | Total Written-off loans | Written – off Loans (Large Industries and Services) |
|---|---|---|
| 2014-15 | 58,786 | 18,178 |
| 2015-16 | 70,413 | 30,687 |
| 2016-17 | 1,08,373 | 55,786 |
| 2017-18 | 1,61,328 | 81,036 |
| 2018-19 | 2,36,265 | 1,25,797 |
| 2019-20 | 2,34,170 | 1,23,436 |
| 2020-21 | 2,02,781 | 1,27,050 |
| 2021-22 | 1,74,966 | 69,533 |
| 2022-23 | 2,09,144 | 1,09,465 |

(இந்திய ரிசர்வ் வங்கி ஆர்.டி.ஐ.மூலம் S-5475/01.12.001/2022-23 Vol11 – 11-10-2023 தேதியிட்ட பதிலில் குறிப்பிடப்பட்ட விபரங்கள்)

இப்படி பிணை இல்லா கடன் வாங்கியவர்களின் பட்டியலை கேட்டால் அது இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்திற்கு எதிரானது என்றும் அதை தரவேண்டியதில்லை என்றும், பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் தருகிறார். நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நாட்டின் நிதிநிலை பற்றி அறிய உரிமை இருக்கிறது.

அண்ணாமலை மாநில அரசாங்கத்தின் கடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3.5 லட்சம் இருப்பதாக வருத்தம் தெரிவித்து இருக்கிறார். இந்தியாவின் கடன் குறிப்பாக மோடி ஆட்சிக்கு வந்த பின்னர் வாங்கிய 100 கோடி கடன் என்பது ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் 4 லட்சம் இருக்கிறதே. அதை பற்றி பேச யோக்கியதை இருக்கிறதா?

இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களும் பெற்ற கடன் தொகை மொத்தமே 65 லட்சம் கோடி தான். 25 லட்சம் கோடி பெரு முதலாளிகளுக்கு தள்ளுபடி செய்த மோடி அரசாங்கம் மாநிலங்களின் கடன்களை தள்ளுபடி செய்து இருக்கலாமே.. இந்த மாநிலங்களின் கடன்களில் பெரும்பான்மை நலத்திட்ட உதவிக்காக செய்தவை தானே.

இப்படியாக அனைத்திலும் ஊழல், முறைகேடு, தனியார் துறைக்கும் தனது கூட்டாளிகளுக்கும் ஆதரவான நிலையில் இந்த ஆட்சி நடந்து வருகிறது. அந்த கூட்டாளிகள் தான் பாஜக சட்டமன்ற உறுப்பினர்களை வாங்குவதற்கும் தேர்தல் செலவினத்திற்கும், ஊடக விளம்பரத்திற்கும், விமானங்கள் உள்ளிட்ட தளவாடங்களை கொடுத்து உதவி வருகிறது. அவர்களுக்கு பிரதி உபகாரமாக இந்த மோடி அரசு உதவிகளை கைமாறாக செய்து வருகிறது.

**கட்டுரையாளர்; ஆர் எம் பாபு**
**இடதுசாரி செயற்பட்டாளர் (அறம் இணைய இதழ்)**

# அதானியின் முறைகேடுகளுக்கு அரசே உதவுகிறது..!

***-ச.அருணாசலம்***

October 18, 2023

ஒரு மெகா திருடனுக்கு அரசாங்கமே சகல வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதும், அந்த முறைகேடு அம்பலமானால், அவனைக் காப்பாற்ற நீதிமன்றங்களுக்கே நெருக்கடி ஏற்படுத்துவதும் உலகமே கண்டிராத விசித்திரமாகும்..! அதை இந்தியாவில் பாஜக அரசு நிகழ்த்திக்காட்டியது விவரிக்கப்படுகிறது!

2019ம் ஆண்டு ஜனவரியில் டி எல் அகாசியா என்ற 229 மீட்டர் நீளமுடைய பெரிய சரக்கு கப்பல் கலிஓரங்க் என்ற இந்தோநேசியா நாட்டு துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. கிழக்கு களிமந்தன் பகுதியிலிருந்து புறப்பட்ட அந்த சரக்கு கப்பல் இந்திய எரிபொருள் நிறுவனத்திற்காக 74,820 டன் எடையுள்ள நிலக்கரியை சுமந்து கொண்டு புறப்படுகிறது. பனாமிய கொடி பறக்கும் இந்த சரக்கு கப்பல் தென் கொரியாவை சேர்ந்த ஒருவரது கப்பல்.

அதனுடைய கடல் பயணத்தின் போது ஒரு அதிசயம் நிகழ்கிறது. சிந்துபாத் கதையில் வரும் அதிசயங்களையெல்லாம் விஞ்சும் அளவிற்கான அந்த அதிசயம் என்னவென்றால், கப்பலில் உள்ள சரக்கின் (நிலக்கரி) மதிப்பு “இரட்டிப்பு” ஆகியது. 1.9 மி. டாலர் (15.82 கோடி ரூபாய்) பெறுமான நிலக்கரி , கடல் போக்குவரத்து மற்றும் கப்பல் கட்டணம் 42,000 டாலர் ( 35 லட்சம் ரூபாய்) சேர்த்து இந்தியாவில் உள்ள அதானி வசமுள்ள முந்த்ரா துறைமுகத்தை அடையும் பொழுது, அதன் மதிப்பு 16.17 கோடி ரூபாயாக இருக்க வேண்டும் . ஆனால் அதன் மதிப்போ 4.3மி. டாலராக (35.78 கோடி ரூபாய்) அறிவிக்கப்பட்டது.





FT BIG READ. INDIAN BUSINESS & FINANCE

Adani and the mysterious coal price rises

இந்த அகாசிய கப்பல் அதிசயம் போல் பல்வேறு ஷிப்மென்ட் அதிசயங்களை நிகழ்த்தி, அதானி நிறுவனம் இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்தது. இதில் 30 ஷிப்மென்ட்களை பற்றி மட்டும் புகழ்பெற்ற ‘பைனான்சியல் டைம்ஸ்’-Financial Times பத்திரிக்கை அலசி ஆராய்ந்தது. 2019-2021 காலகட்டத்தில் நடந்த இந்த அதிசய இறக்குமதிகளில் மொத்தம் 3.1 மி. டன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதையும் , அதன் உண்மைவிலை (139மி +3.1மி டாலர்= 1182.77 கோடி ரூபாயாக இருக்க, சுங்க இலாகாவில் தெரிவிக்கப்பட்ட மதிப்பு 215மி டாலராகும்! சுமார் 1,790 கோடி ரூபாய்கள்! கடல் பயணத்தின்போதே 73 மி. டாலர் லாபம் ஈட்டும் அதிசயத்தை அதானியால் மட்டுமே நிகழ்த்த முடிகிறது என பைனான்சியல் டைம்ஸ் பத்திரிக்கை குற்றம் சாட்டுகிறது.

இதன் மூலம் சுமார் 12,000 கோடி ரூபாய் அதானி இந்திய அரசுகளிடமிருந்து 2019-2021 வரையிலான இரண்டு ஆண்டுகளில் மட்டும் கொள்ளையடித்துள்ளார் என பைனான்சியல் டைம்ஸ் பத்திரிக்கை கூறியுள்ளது. இதெல்லாம் யாருடைய பணம்? அதானி என்டர்பிரைசஸ் என்ற அதானி குழுமத்தின் புகழ்பெற்ற நிறுவனம் நிலக்கரி இறக்குமதியிலும், விற்பனையிலும் கொடி கட்டி பறந்து அதானிக்கு “லாபம்” ஈட்டி கொடுத்துள்ளது. இதனுடைய நிலக்கரி விற்பனை பிரிவான ஐ ஆர் எம் ( இன்டக்ரேட்டட் ரிசோர்ஸ் மேனேஜ்மென்ட்) இதன் மூளையாக செயல்படுகிறது.

இந்த பிரிவிலிருந்து வந்த அடுத்த அதிசயம் இறக்குமதியை நேரடியாக கையாளாமல் சிறு சிறு நிறுவனங்கள் மூலமாக நிலக்கரியை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்து இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவதையும் அதானி குழுமம் செய்தது.






அப்படியான சிறு நிறுவனங்கள் தைவானை சார்ந்த ஹை லிங்கோஸ் , துபாயை சேர்ந்த டாரஸ் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரை சார்ந்த பான் ஆசியா ட்ரேட்லிங்க் நிறுவனமாகும். அதானி குழும்ம் 2021-2023 ஆண்டுகளில் இந்த மூன்று நிறுவனங்களுக்கு 4.8பில்லியன் டாலர் கொடுத்து நிலக்கரியை இறக்குமதி செய்தது.

நேரடியாக அதானி குழுமம் இந்த காலத்தில் 73 மி. டன் நிலக்கரியை 2000 ஷிப்மென்ட்களில் இறக்குமதி செய்துள்ளது. இதில் 43 மி. டன் நிலக்கரிக்கு சராசரியாக 130 டாலர் எனவும் மூன்று நிறுவனங்கள் மூலம் அதானி இறக்குமதி செய்த 31 மி. டன் நிலக்கரிக்கு 155 டாலர் என அறிவித்து இந்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அதானி குழும்ம் வசூல் வேட்டை நடத்தியுள்ளது. இதன் மதிப்பு மட்டும் சுமார் 800மி டாலர்! ( இந்திய பண மதிப்பில் 6657.56 கோடி ரூபாய்!)

**இந்த மூன்று கம்பெனிகளுமே அதானியின் பினாமிகள் தான் என்பது அதிசயத்திலும் அதிசயம்.**

சாங் சுங் லிங் என்ற சீனாக்காரனே ஹை லிங்கோசின் உரிமையாளர், அதானியின் பினாமியான இவர், ஆதிகால அதானி நிறுவனர்களில் ஒருவர், அதானி குழுமத்தில் ஷெல் கம்பெனிகளின் மூலமாக பங்குகள் வாங்கி, இந்திய பங்கு சந்தையை ஏமாற்றியவர். 2017 முதல் இவர் அதானி குழுமத்தின் பங்குகளை ரகசியாக வைத்து பங்கு விலை ஏற்ற மோசடிக்கு ஆணிவேராக உள்ளவர். அடுத்து துபாய் கம்பெனியான டாரசின் உரிமையாளர் முகமது அலி ஷபான் அலி , சிங்கப்பூர் நிறுவனமான பான் ஆசியா நிறுவனத்தின் உரிமையாளரும் அதானி கம்பெனியின் முன்னாள் அதிகாரி தான்! ஆக, இம் மூவருமே அதானியின் பினாமிகள் தான் என்பதும், இவர்கள் மூலம் அதிக எரிசக்தி உள்ள நிலக்கரியை சந்தையில் நிலவும் விலையைவிட கூடுதலாக கொடுத்து, இறக்குமதி செய்து அந்தக் கொள்ளையை இந்திய அரசு நிறுவனங்களிடம் வசூலித்தவர் அதானி என்பதை இப் பத்திரிக்கை போட்டு உடைத்துள்ளது.

கொடுக்கும் தளவாடங்களுக்கு அதிக விலை நிர்ணயித்தும், இறக்குமதி செய்யப்படும் நிலக்கரிக்கு அதிக விலை கேட்டும், இந்திய அரசு மற்றும் மாநில அரசு எரிபொருள் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து போட்ட ஒப்பந்தத்திற்கு மேலே, கொள்ளை வசூல் செய்வது அதானியின் வாடிக்கை . குஜராத்தில் மோடியால் பாலூட்டி வளரக்கப்பட்ட அதானி மீது 2013-2014 ஆண்டுகளில் எரிபொருள் உற்பத்தி சாதனங்கள் இறக்குமதியில் அதானி செய்த பண மோசடி குற்றத்திற்காக ஒன்றிய அரசின் பொருளாதார குற்ற புலனாய்வு இயக்ககம் DRI(Director of Revenue Intelligence ) வழக்கு தொடுத்தது.

ஒவர் இன்வாய்சிங் மற்றும் இறக்குமதி செய்த நிலக்கரி விலையை போலியாக உயர்த்தி சப்ளை செய்தல் போன்ற தில்லுமுல்லு நடவடிக்கைகளால் 7,000 கோடிகளுக்கு மேல் மோசடி செய்த குற்றத்தை செபி போன்ற கண்காணிப்பு நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடில்லாமல், வெளிநாடுகளில் உரிய விசாரணை மேற்கொள்ள LR (LETTER REGOTARY) அனுப்பி விசாரித்து குற்ற பத்திரிக்கையும் தாக்கல் செய்தது.

**அதானியின் விமானத்தில் பறந்து வந்து 2014-ல் பிரதமர் பதவியேற்ற மோடி இந்த வழக்குகளை “நண்பேன்டா” என்ற அடிப்படையில் நீர்த்து போக செய்தார்.**

எரிபோருள் உற்பத்தி துறையில் நுழைந்து , நிலக்கரி இறக்குமதி மூலமும் , இயந்திரங்கள் இறக்குமதி மூலமும் கொள்ளையடிக்க அதானிக்கு வழிவகுத்து கொடுத்தது மத்திய மாநில அரசுகள் அதானியுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள்தான் .

வாஜ்பாய் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மின்துறை சீர்திருத்தங்கள் மூலம் தனியார்துறை இந்த முக்கியமான துறையில் நுழைய தொடங்கியது(PAP) PUBLIC AND PRIVATE PARTNERSH மூலம் உள்ளே நுழைந்த அதானிக்கு பல்வேறு மாநிலங்கள் மின் உற்பத்தி மற்றும் வினியோக ஒப்பந்தங்களை (அதானி பவர் கம்பெனிக்கு ) வாரி வழங்கியது. மோடி இத்துடன் நில்லாமல் அதானிக்கு துறைமுகங்களையும் , விமான தளங்களையும் பாதுகாப்பு தளவாட உற்பத்தி ஒப்பந்தங்களையும் வாரி வழங்கினார். பொது சொத்துக்களை அதானிக்கு அடிமாட்டு விலைக்கு விற்றார். அதானிக்கு யாரும் போட்டியாக வரக்கூடாது என்ற நிலைமையை மோடி அரசு சி.பி.ஐ., இ.டி.ஐ.டி. துறைகள் மூலம் ஏற்படுத்தி அதானி கொள்ளையடித்து பெருக்க வழி செய்யப்பட்டது.

உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் நண்பன் அதானிக்காக மோடி தலையிட்டு நிலக்கரி சுரங்கங்களையும் துறைமுகங்களையும், மின் உற்பத்தி ஒப்பந்தங்களையும் பெற்றுக் கொடுத்தார்.

இப்படியாக உலகப்பணக்காரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்திற்கு அதானியை உயர்த்திய பெருமை மோடிக்கு உண்டு. குஜராத்தில் மட்டும் 2021-2022 ஆண்டில் மின உற்பத்திக்காக அதானிக்கு ஒப்பந்தத்தை மீறி 102% அதிக பணம் குஜராத் அரசு வழங்கியுள்ளது. இதன் அளவு 13000/- கோடி ரூபாய் ஆகும்!

இதே போன்று ஜார்க்கண்ட் மாநிலத்தில் கோடா (Godda Power Plant) அதானிக்கு சொந்தமானது, இங்கும் 7400 கோடி ரூ. அந்த மாநிலம் அதானிக்கு கூடுதலாக வழங்கியுள்ளது.
அதானி பவர் மகாராஷ்டிரா லிட்., (APML). அதானி பவர் ராஜஸ்தான் லிட்., (APRL). போன்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும்

அதிகப்படியான பணத்தை (7000 + 6000 கோடி ரூ) எதிர்த்து மாநில அரசுகள் தொடரந்த வழக்கில் உச்ச நீதி மன்ற நீதிபதி அருண் மிஷ்ரா தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு அதானிக்கு ஆதரவாக மாநில அரசுகளின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து தீர்ப்பு வழங்கியது. அருண் மிஷ்ரா பதவி ஓய்வு பெறும் வரை கிட்டத்தட்ட ஏழு வழக்குகளில் அதானிக்கு சாதகமாக தீர்ப்புகள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

- மின் உற்பத்தி ஒப்பந்தங்களை கையகப்படுத்துவது: மின்உற்பத்தி இயந்திரங்களை இறக்குமதி செய்து அதற்கான விலையை அதிகரித்து பொய்கணக்கு கொடுப்பது
- இறக்குமதி செய்யும் நிலக்கரி விலையை உயர்த்தி இன்வாய்ஸ் கொடுப்பது,
- மின் கட்டணங்களை தாறுமாறாக உயர்த்துவது... என்ற உத்திகள் மூலம் அதானி குழுமம் கொள்ளையடிப்பது தொடர்கிறது.

அந்தக் கொள்ளையை மூடி மறைப்பதும், கண்டும் காணாமல் இருப்பதும், அப்படி ஏதாவது வழக்குகள் வந்தால் அதை நீர்த்து போக செய்வதுமான மோடி அரசின் செயல்பாடுகள் இன்று உலகிற்கே வெட்ட வெளிச்சமாகிவிட்டது. கேள்வி கேட்பவர்களையும், பத்திரிக்கையாளர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் மிரட்டுவது, பொய் வழக்கு போடுவது பயங்கரவாதிகளாக சித்தரித்து டெர்ரிச வழக்குகளை போடுவது என்ற பாணியை ஒன்றிய அரசு கடைபிடித்து வருகிறது.

இன்று ஓடி ஒளிய இடமின்றி உலகெங்கும் அம்பலப்பட்டு நிற்கும் அதானிக்கு , ஆதரவாக சட்டங்களை இயற்றியும், சொத்துக்களை தாரை வார்த்தும் இந்திய மக்களை பாதாளத்தில் தள்ளி, மோசடி செய்யும் மோடிக்கு இருக்கும் ஒரே ஆயுதம் அல்லது கவசம் இந்துத்துவா என்னும் இந்து மத வெறிஉணர்வுதான்.

இந்த மதவெறி மூலம், அரசியல் அதிகாரத்தை பிடித்து ஆட்சியில் இருப்போரை அதனின்றும் இறக்காவிடில் இந்திய மக்கள் இன்றிருப்பதிலும் மோசமான நிலைக்கு செல்வதை யாரும் தடுக்க முடியாது.

கட்டுரையாளர்;**ச.அருணாசலம்**

# இப்படியும் ஒரு மனிதர் தமிழகத்தில் முதல்வராக இருந்துள்ளார்.

தமிழகத்தின் முதல் அமைச்சராக காமராஜர் ஒன்பதரை ஆண்டுகள் இருந்த நேரம். காமராஜரின் தாயார் உடல்நலம் சரியில்லாமல் இருப்பதாகத் தகவல் வந்தது. உடனே மதுரைக்குச் சென்று அங்கிருந்து நெடுமாறனுடன் காரில் விருதுநகருக்குச் சென்றார்

காமராஜர் வீட்டிற்குள் நுழைந்ததும் படுக்கையில் இருந்த காமராஜரின் தாயார் சிவகாமி அம்மாள் கண் விழித்துப் பார்த்தார். மகனைப் பார்த்ததும் நெகிழ்ந்து கண்ணீர் விட்டார். அருகில் உட்கார்ந்த காமராஜர் அம்மாவிடமும், சகோதரியிடமும் விசாரித்து விட்டுக் கிளம்பினார்.

'' அப்போ.. நான் வர்றேன்.. உடம்பை நல்லாப் பார்த்துக்க''.. கிளம்பிய போது உலர்ந்த குரலில் சிவகாமி அம்மாள் சொன்னார். ''ஒரு வாய் சாப்பிட்டுட்டுப் போ''.

''வேண்டாம்மா'' என்று முதலில் மறுத்தவர்,

'' சரி..சரி.. எடுத்து வைங்க''.. அடுக்களைக்குள் சென்று தரையில் உட்கார்ந்தார். அவருடைய சகோதரியின் மகள்கள் உணவு பரிமாறினார்கள்.

அவசரமாய்ச் சாப்பிட்டு விட்டு அம்மாவைப் பார்த்துக் கைகூப்பினார் காமராஜர்.

'' அப்போ நான் வரட்டுமா?''

சொந்த வீட்டில் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு தாயாரின் இறுதிக்காலத்தில் காமராஜர் சாப்பிட்டதாக இது குறித்து எழுதியிருந்தார் எழுத்தாளர் சாவி. '' மரணத்தின் போது இன்னொருவர் பணம் கொடுக்கிறார். பல்லக்குக் கட்டுகிறவர் இலவசமாகக் கட்டித் தருகிறார்.

வந்தவர்களுக்கு ஒரு வேளை சோறு போட இடமும் இல்லை, பணமும் இல்லை, பத்து வருஷம் ராஜாங்கம் நடத்தினான் மகன்.. பெற்ற தாய் வாழ்ந்த கதை இப்படி''. - என்று காமராஜரின் தாய் சிவகாமி அம்மாள் மறைந்தபோது எழுதினார் கவிஞர் கண்ணதாசன்.

விருதுநகரில் காமராஜர் வாழ்ந்த அந்த எளிய வீட்டை- இந்திரா காந்தியிலிருந்து, லால்பகதூர் சாஸ்திரி வரை பலரும் வந்திருக்கிற வீட்டைப் பிறகு அரசுடமை ஆக்கியிருந்தார்கள்.

குமுதத்தில் எழுதுவதற்காக 95ல் விருதுநகரில் உள்ள காமராஜரின் வீட்டுக்கு திருஞான மயிலாப்பூர் பெருமாள் போயிருந்தார். அருகில் இன்னொரு வாடகை வீட்டில் காமராஜரின் தங்கை நாகம்மாளின் மகளான கமலாதேவி வசிப்பதாகச் சொன்னதும் அங்கு போனேன். மிக எளிய வீடு. காமராஜர் மறைந்த பிறகு பாரத ரத்னா கொடுக்கப்பட்ட போது அதைப் பெற்றுக் கொண்டவர்கள் நாகம்மாள் குடும்பத்தினர் தான். அறுபத்து மூன்று வயதான காமராஜரின் மருமகளான கமலாதேவி வறுமையில் ஒடுங்கிப் போயிருந்தார். கணவர் இறந்துவிட அவருடைய மகன்கள் தீப்பெட்டி ஆபிஸில் ஐநூறு ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மிகக் குறைந்த வருமானம் குடும்பத்தைத் தவிக்க வைத்திருந்தது. '' நாங்க ஏழு பேர் இருக்கோம். சாப்பிடவே கஷ்டமா இருக்குப்பா. கஷ்டம் தாங்காம கலெக்டர் காலில் கூட விழுந்து அழுது கூடக் கேட்டுப் பார்த்துட்டேன். எந்த வேலையும் கிடைக்கலைப்பா..''

- எதிரில் இருந்த நாகம்மாளின் குரல் ஏறி இறங்கியது. பெருமூச்சு விட்டார்.

'' இப்போ பக்கத்து வீடுகளில் வேலை செய்றேன்.. கூட்டுறேன்.. இந்தா இருக்கு பாருப்பா (பக்கத்தில் இருக்கும் காமராஜரின் வீட்டைச் சுட்டிக்காட்டுகிறார்.) எங்க மாமா வீட்டிலே பெருக்கிற வேலையாவது வாங்கிக் கொடுக்கச் சொல்லுப்பா.. உனக்குப் புண்ணியமா இருக்கும்..

அங்கே கூட்டினாலாவது கையில் ஐம்பதோ, நூறோ கூலியாக் கிடைக்குமில்லைப்பா..

நான் அங்கே போய்ப் பெருக்கினா அவமானம்னு சொல்றாங்க.. நம்ம நிலைமை இப்படி இருக்கிறப்போ எங்க மாமா வீட்டைக் கூட்டிப் பெருக்கிறதில என்ன அவமானம் இருக்குப்பா..'' -சொன்னபடி கசிந்து அழுதார் ஒரு முதல்வராக இருந்தவரின் மருமகள். சேலை முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

'' மாமா இருக்கிற வரை அவருக்கும் சேர்த்துக்கலை.. குடும்பத்துக்கும் சேர்த்துக்கலை.. இப்போ பாருப்பா விதவை பென்ஷனுக்கு மனுப் போடுற நிலைமையிலே இருக்கேன்''. சொல்லும் போது கைகூப்பின காட்சி முள்ளாய் உறுத்தியது.

அடுத்த வாரம் 96, மே மாதத்தில் குமுதத்தில் ''வீட்டுவேலை செய்யும் காமராஜரின் மருமகள்'' என்ற தலைப்பில் என்னுடைய கட்டுரை வெளிவந்தது. வெளிவந்த மறுவாரத்தில் ஆச்சர்யமானதொரு மாற்றம்… முதல்வர் ஜெயலலிதா காமராஜரின் குடும்பத்திற்கு வீடும், வேலை வாய்ப்பும், வங்கியில் 11 லட்சம் ரூபாய் டெபாசிட்டும் பண்ணுவதாக அறிவிப்பு வெளியானது.

அந்தத் தகவலைச் சொல்ல மறுபடியும் விருதுநகரில் உள்ள கமலாதேவி வீட்டுக்குப்போனபோது அந்த அம்மையார் நெருங்கி வந்து கையைப் பிடித்துக் கொண்டார். கண்கள் ததும்பின. கனிந்த பார்வையில் நன்றி சொன்னார் கமலாதேவி அம்மாள் என்று எழுத்தாளர் மணா மணா அவர்கள் எழுதியுள்ளார்.

**இப்படியும் ஒரு மனிதர் தமிழகத்தில் முதல்வராக இருந்துள்ளார்.**

---

## ஏமாற்றி பிழைக்கும் மருத்துவ உலகம் !

கறுப்பு பணம் சம்பாதிக்கும் வழிகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் !…

ஏன் ரூபாய் நோட்டு தடையும் தேவை ?

மாரடைப்பு ஏற்பட்டுள்ளது ! எனில், மருத்துவர் கூறுகிறார் - Streptokinase ஊசி போடுங்கள்… என்று. அதற்கு, ரூ. 9,000/ ரூபாய்… என்கின்றனர். ஆனால், ஊசியின் உண்மையான விலை ரூ. 700/ - முதல் 900/- வரை மட்டுமே. ஆனால் MRP ரூ. 9,000/- !… .

**அப்பாவி மக்கள், என்ன செய்வார்கள் ? ….**

டைபாய்டு வந்தது… எனில், மொத்தம் 14 மோனோசெஃப் எடுக்கப்படும் ! மொத்த விற்பனை விலை ரூ 25/- … ஆனால், மருத்துவமனையின் வேதியியலாளர் ரூ.53/- விலைக்கு தருகிறார்…

**மக்கள் என்ன செய்வார்கள் ??**

சிறுநீரகம் செயலிழந்து விட்டது.. மூன்று நாளுக்கு ஒருமுறை டயாலிசிஸ் செய்யப்படுகிறது.., டயாலிசிஸ் முடிந்து ஒரு ஊசி போடப்படுகிறது . MRP அனேகமாக ரூ.1800/- ! அதை மொத்த சந்தையில் இருந்து எடுக்க எண்ணினால், இந்தியா முழுவதும் தேடினாலும் எங்கும் கிடைக்காது … ஏன் ? மருந்து நிறுவனம், மருத்துவருக்கு மட்டுமே சப்ளை செய்கிறது !! அந்த இன்ஜெக்ஷனின் அசல் விலை ரூ. 500/- மட்டுமே, ஆனால் மருத்துவர், தனது மருத்துவமனையில் ரூ.1800/- க்கு தருகிறார்.

**மக்கள் என்ன செய்வார்கள் ??**

நோய் தொற்று ஏற்பட்டு விட்டது..! மருத்துவர் எழுதிய ஆன்டிபயாடிக் விலை ரூ.540/- அதே மருந்து மற்றொரு நிறுவனத்தில் ரூ. 150/- மற்றும் ஜெனரிக் விலை ரூ. 45 /-- ஆனால் வேதியியலாளர் மறுக்கிறார்.., நாங்கள் ஜெனரிக் அல்லது மற்ற நிறுவனங்களைத் சார்ந்தவற்றைத் தர மாட்டோம்.., என்பார்; மருத்துவர் எழுதிக் கொடுத்ததை மட்டும் கொடுப்பார்கள்… அதாவது 540/- ?

**மக்கள் என்ன செய்வார்கள் ??**

சந்தையில் அல்ட்ராசவுண்ட் பரிசோதனை 750/- ரூபாயில் உள்ளது., அறக்கட்டளை மருந்தகம் 240/- ரூபாயில் தருகிறது ! எனவே, ரூ. 750/- யில், மருத்துவர் கமிஷன் 300/- ரூபாய் ! எம்ஆர்ஐயில், டாக்டர் கமிஷன் ரூ. 2,000/- முதல் 3,000/= வரை! டாக்டர்கள் மற்றும் மருத்துவமனைகளின் இந்த கொள்ளை, இந்த களியாட்டம், அச்சமின்றி, இந்நாட்டில் சர்வசாதாரணமாக நடக்கிறது!

- மருந்துக் கம்பெனிகளின் லாபி, நாட்டையே நேரடியாகப் பிணயக் கைதியாக வைத்திருக்கும் அளவுக்கு வலிமையானது !
- மருத்துவர்களும், மருந்து நிறுவனங்களும் கூட்டு கொள்ளையிடுகின்றன !. . இருவருமே அரசாங்கத்தை பிளாக்மெயில் செய்கிறார்கள்...!!

**இதில், மிகப்பெரிய கேள்வி...**

ஊடகங்கள் இதைக் காட்டாமல், இரவும் பகலும் வேறு என்னத்த காட்டுகின்றன ?.... .

- குழியில் விழுந்த இளவரசன்.., டிரைவர் இல்லாத கார், ராக்கி சாவந்த், பிக்பாஸ், மாமியார் மருமகள் சூழ்ச்சி, க்ரைம் ரிப்போர்ட், கிரிக்கெட் வீரரின் கேர்ள் பிரெண்ட், இதையெல்லாம் காட்டுகிறார்கள்.
- ஆனால். டாக்டர், மருத்துவமனை மற்றும் மருந்து நிறுவனங்களின் வெளிப்படையான கொள்ளையை ஏன் காட்ட வில்லை ?.....
- ஊடகங்கள் காட்டவில்லை என்றால், வேறு யார் காட்டுவார்கள் ?
- பின்னர் எப்படி மருத்துவ லாபியின் கொடுமை நிறுத்தப்படும் ?
- இந்த லாபி.... அரசாங்கத்தையே.... கையாலாகாத நிலையில் வைத்திருக்கிறதா ?
- ஊடகங்கள் மௌனமாக இருப்பது ஏன் ?
- ரூ. 20/- கூடுதலாக கேட்டால் ஆட்டோரிக்ஷாகாரரிடம், மக்கள் எகிறுவார்கள்,..!
- ஆனால், கொள்ளையிடும் டாக்டரை என்ன செய்வார்கள் ???

இது உண்மை என்று நீங்கள் நினைத்தால், அனைவருக்கும் அனுப்புங்கள்! விழிப்புணர்வை கொண்டு வாருங்கள்; மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த உங்கள் ஆதரவை வழங்குங்கள் !!!....

**இலட்சிய சமூகத்தை உருவாக்குபவர்கள் *சிந்தனை மாற்றம்*. .**

**- டாக்டர். பிரதீப் அகர்வால்......**

https://www.facebook.com/DrPardeep-Aggarwal-381141815344043/

---

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**

**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது.

பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**

**Savings A/C No: 000901000041657**

# நமது அடிப்படைத் தேவைகள் என்ன?

ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளான காற்று, நீர், உணவு, உடை மற்றும் உறைவிடம்.

**காற்று**

- நாம் சுவாசிக்க காற்று வேண்டும். சுவாசம் இல்லாமல், நாம் நீண்ட காலம் வாழ முடியாது.
- காற்றில் ஆக்ஸிஜன் உள்ளது, இது வாழ்க்கைக்கு இன்றியமையாதது.
- நாம் சுவாசிக்கும்போது, காற்று நம் நாசி வழியாக நம் உடலுக்குள் நுழைந்து நமது நுரையீரலை நிரப்புகிறது.
- இரத்தம் ஆக்ஸிஜனை உறிஞ்சி நம் உடல் முழுவதும் சுழற்றுகிறது.
- ஆக்சிஜன் வாயுவை உள்ளிழுத்து நம் உடலில் இருந்து கார்பன் டை ஆக்சைடை வெளியேற்றுகிறோம்.
- நாம் உயிர் வாழ்வதற்கு காற்று இன்றியமையாதது. சுத்தமான காற்றை சுவாசிக்க, காற்று மாசுபடுவதைத் தடுப்பதன் மூலம் காற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

**தண்ணீர்**

- பூமியில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தண்ணீர் இன்றியமையாதது. நான்கைந்து நாட்களுக்கு மேல் தண்ணீர் இல்லாமல் நம்மால் வாழ முடியாது.
- குடிப்பதற்கும், குளிப்பதற்கும், துவைப்பதற்கும், நீர்ப்பாசனம் செய்வதற்கும், சுத்தம் செய்வதற்கும், தண்ணீர் மிகவும் அவசியம்.
- நம் உடலில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர். நீர் சுழற்சிக்கு உதவுகிறது மற்றும் கழிவுப்பொருட்களை வெளியேற்றுகிறது.
- நாம் பயன்படுத்தும் மின்சாரமும் முக்கியமாக தண்ணீரால் உற்பத்தி செய்யப்படுகிறது.
- பூமியில் வாழும் விலங்குகள், தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்களுக்கும் தண்ணீர் இன்றியமையாதது.
- நாம் ஒரு நாளைக்கு எட்டு கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும். எனவே, தண்ணீரைப் பாதுகாத்து தூய்மையாக வைத்திருப்பதில் அக்கறை காட்ட வேண்டும். எனவே, தண்ணீரை மாசுபடுத்துவதையும், தண்ணீரை வீணாக்குவதையும் தவிர்க்க வேண்டும்.

**உணவு**

- உணவின்றி வாழ முடியாது என்பதால் உணவுதான் நமது முதன்மைத் தேவை.
- நாம் உணவைத் தவிர்த்தால், நமக்கு அமைதியின்மை ஏற்படுகிறது. உணவு உண்ணாமல் நீண்ட காலம் வாழ முடியாது.
- நாம் உண்ணும் உணவில் இருந்து நமது உடல் ஆற்றலைப் பெறுகிறது, மேலும் அது வேலை செய்வதற்கும், ஓடுவதற்கும், விளையாடுவதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்கும், பலவற்றையும் வழங்குகிறது.
- உணவு நமது வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு உதவுகிறது, நம்மை வலிமையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறது மற்றும் நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.
- நம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க ஆரோக்கியமான மற்றும் சமச்சீர் உணவை உண்ண வேண்டும்.
- பழமையான, அழுகிய மற்றும் சமைக்கப்படாத உணவுகளை உண்பதை தவிர்க்கவும். பயன்படுத்துவதற்கு முன்பு எப்போதும் காய்கறிகள் மற்றும் பழங்களை நன்கு கழுவவும். மேலும், உணவை சுகாதாரமாக சமைத்து உண்ணவும்.

**ஆடை**

- ஆடைகள் நமது முதன்மை தேவை.
- ஆடைகளால் உடலை மூடுகிறோம்.
- வெப்பம், குளிர், மழை, தூசி போன்றவற்றில் இருந்து ஆடை நம்மைக் காக்கிறது.
- ஆடைகள் நம் உடலுக்கு அழகையும் அழகையும் வழங்குகின்றன, மேலும் அடக்கம் மற்றும் தனியுரிமைக்கு அவசியமானவை.
- வானிலைக்கு ஏற்ப ஆடைகளை அணிகிறோம். வெயில் காலத்தில் பருத்தி ஆடைகள் உடுத்துவதால், வெப்பமான வெப்பநிலையில் இருந்து நம்மை பாதுகாக்கும். குளிர்

காலத்தில் கம்பளி ஆடைகள் அணிவது, அவை நம்மை சூடாகவும் குளிரில் இருந்து பாதுகாக்கவும் செய்கின்றன.

**தங்குமிடம்**

- மனிதர்களாகிய நமக்கு நம்மைப் பாதுகாத்துக் கொள்ள தங்குமிடம் தேவை.
- தேவை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு வகையான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.
- வெப்பம், குளிர், சூறாவளி, தூசி, புயல், பனி, காட்டு விலங்குகள் போன்ற பல்வேறு பகுதிகளில் ஆறுதல், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற தேவைகளை எளிதாக்கும் வகையில் வீடுகளை உருவாக்கி நாங்கள் தங்குமிடங்களை உருவாக்கினோம்.

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

Q1, **நமக்கு ஏன் ஆடைகள் தேவை?**

- உடலை மறைக்கவும், குளிர் மற்றும் வெப்பத்தில் இருந்து நம்மை பாதுகாக்கவும் ஆடைகள் தேவை.

Q2 **ஒரு நல்ல வீட்டின் முக்கிய அம்சங்கள் என்ன?**

ஒரு நல்ல வீட்டின் முக்கிய அம்சங்கள்:

- வீடு காற்றோட்டமாகவும் விசாலமாகவும் இருக்க வேண்டும்.
- அதற்கு நல்ல வடிகால் வசதி இருக்க வேண்டும்.
- சமையலறை நன்கு காற்றோட்டமாக இருக்க வேண்டும். அதனால் புகை சேராது.

Q3 **நமக்கு ஏன் காற்று தேவை?**

- காற்று நம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.
- காற்றில் ஆக்ஸிஜன் உள்ளது, இது வாழ்க்கைக்கு இன்றியமையாதது.
- உணவில் உள்ள ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்து கூறுகள் இணைந்து நமது உடலுக்கு ஆற்றலை வழங்குகின்றன.

Q4 **நமக்கு ஏன் தண்ணீர் தேவை?**

தண்ணீர் இல்லாமல் நாம் வாழ முடியாது.

- நாம் தினமும் குறைந்தது 8 முதல் 10 கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- உடலில் நீர் பற்றாக்குறை பல வகையான பிரச்சனைகளை உண்டாக்கும்.

---

## அரசியலையே முதலீடாக்கிய ஆகப்பெரும் கார்ப்பரேட்!

***-சாவித்திரி கண்ணன்***

October 10, 2023

ஜெகத்ரட்சகன் சொத்து விபரங்கள் இவர் 'தமிழகத்தின் அதானி' எனச் சொல்கிறது! திமுகவின் கஜானாவாக அறியப்படும் ஜெகத்ரட்சகன் இனியும் திமுகவில் செல்வாக்குடன் தொடர்வாரா? பாஜகவை நோக்கி நகர்வாரா? அல்லது பொருளாதார பேரம் நடத்தி பாஜக தலைமையை சரிகட்டிவிடுவாரா..? 15 க்கு மேற்பட்ட கல்லூரிகள், நட்சத்திர ஹோட்டல்கள், உயர்தர மருத்துவமனைகள், நிலக்கரி சுரங்கம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, மதுபான தொழிற்சாலை.. என அரசியலையே முதலீடாக்கி மிகப் பெரிய கார்ப்பரேட் ஆன ஜெகத்ரட்சகன் மக்களுக்கு செய்தது என்ன?

ஜெகத்ரட்சகன் சம்பந்தப்பட்ட 70 இடங்களில் ஐந்து நாட்களாக ரெய்டுகள் நடந்தன! இதில், சவீதா கல்லூரியின் பிணவறையில் 19 மூட்டைகள் நிறைய கரன்சிகள் கைப்பற்றப்பட்டதாக பரபரப்பாக வெளியான தகவலும், கிலோ கணக்கில் தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டதாக வெளியான தகவலும் எந்த அளவு உண்மை எனத் தெரியவில்லை. வருமான வரித் துறையினர் கைப்பற்றப்பட்ட விவகாரங்களை அதிகமாக கசியவிடவில்லை. அதிகாரபூர்வமாக 4.50 கோடி ரொக்கமும், 2.7 கிலோ தங்கமும், விலை உயர்ந்த வெளிநாட்டு வாட்சுகள் ஏழும் கைப்பற்றப்பட்டதாக பத்திரிகை செய்திகள் சொல்கின்றன.

விழுப்புரம் அருகே பண்டிச்சேரி செல்லும் வழியில் உள்ள வழுதாவூர் என்ற சின்னஞ்சிறு ஊரில் வறுமையுள்ள குடும்பத்தில் பிறந்தவர் தான் ஜெகத்ரட்சகன். மாணவப் பருவத்திலேயே திமுகவில் இருந்தவர். செங்கல்பட்டு மாணவரணியின் செயலாளராக 1971 களில் வலம் வந்த ஜெகட்ரட்சகன் அந்த நாட்களில் திருச்சி சௌந்திரராஜனின் அணுக்க உதவியாளராக இருந்துள்ளார்.


எம்.ஜி.ஆர் அதிமுகவை உருவாக்கிய போது, அதிமுகவிற்கு வந்த ஜெகத்ரட்சகன் ஆர்.எம்.வீரப்பனால் அரசியலில் வளர்த்தெடுக்கப்பட்டவர். ஜெயலலிதாவுடன் ஆரம்பத்தில் முரண்பட்டவர் பின்பு சமாதானமானார். பிறகு வீர வன்னியர் பேரவை என வன்னியர் அடையாளத்தை தன்னுடைய அரசியல் துருப்பு சீட்டாக்கினார். இதனால், டாக்டர் ராமதாசை எதிர்கொள்ள கலைஞர் இவரை பயன்படுத்திக் கொள்ள திமுகவில் இணைத்துக் கொண்டார்.





1984 தொடங்கி நாற்பது ஆண்டுகளாக எம்.பி, மத்திய அமைச்சர் போன்ற டெல்லி அதிகாரமையத் தொடர்பை வணிகத்திற்கு பயன்படுத்தி, தமிழகத்தின் மிகப் பெரிய கார்ப்பரேட்டாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டார். இவர் நடத்தும் கல்லூரிகளில் பேராசிரியர்களுக்கு வாழமுடியாத அடிமாட்டுச் சம்பளம் தான் தந்து கொண்டிருக்கிறார். ஆனால், மாணவர்களிடமோ லட்ச,லட்சமாக நன்கொடையும் கல்விகட்டணமும் பெறுகிறார். இவர் நடத்தும் கம்பன் விழா, மார்கழி பெருவிழாக்களில் தமிழறிஞர்கள், புலவர்கள், எழுத்தாளர்களை அழைத்து பேச வைத்து, தன்னையும் புகழ வைத்து நல்ல சன்மானங்களும், பரிசில்களும், விருதுகளும் தருவார்.






தமிழகத்தின் மிக முக்கிய மதுபான தொழிற்சாலையான எலைட் டிஸ்டில்லரிஸ், ஏ.எம்.பிரவுரிஸ் ஆகியவற்றை காஞ்சிபுரம் மாவட்டம் தேவரியம்பாக்கம் மற்றும் இளையனூர் வேலூரில் நிறுவியுள்ளார்!

2019 ஆம் ஆண்டு சில்வர் பார்க் இண்டர்நேஷனல் என்ற சிங்கப்பூர் நிறுவனம் இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு வர்த்தகத்தில் ரூ.27,000 கோடி முதலீடு செய்வதாக இலங்கை முதலீட்டு வாரியம் அறிவித்தது. அதன் இயக்குநர்களாக சென்னையைச் சேர்ந்த ஜெகத் ரட்சகன், நிஷா, ஜெகத்ரட்சகன் சந்தீப் ஆனந்த், ஜெகத்ரட்சகன் அனுசுயா உள்ளிட்டோர் இருப்பதாக பதிவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இயக்குநர்களில் ஒருவரான சந்தீப் ஆனந்த் ஜெகத்ரட்சகனின் மகன், நிஷா அவரது மகள், அனுசுயா அவரது மனைவி ஆவார்.

- இப்படி அரசியலையே வணிக முதலீடாக்கி,

- ஒரு பக்கம் சமூக நீதி பேசும் திராவிட அரசியல்,
- மறுபக்கம் ஆழ்வார் மையம் என்ற ஆன்மீக முகம்,
- வன்னியர் என்ற சாதி அரசியல்,
- மற்றொரு பக்கம் கல்வி தொடங்கி சாராயம் வரை சகல தொழில்களிலும் முதலாளி..

என சுயநலத்தோடு 40 ஆண்டுகளாக வலம் வந்துள்ளார். இப்படியான ஒருவரால் எப்படிமக்கள் நலன் சார்ந்து சிந்திக்கவோ, திட்டமிடவோ,செயல்படவோ முடியும். அரசியலில் இருந்தும், பொது வாழ்வில் இருந்தும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய நபரான இவர் திமுகவுக்கு தேர்தல் நேர கஜானாவாக இருப்பதால் தொடர்ந்து கோலோச்சுகிறார். பல்லாண்டுகாலமாக அரக்கோணம் தொகுதியில் பணபலத்தாலும், சாதி பலத்தாலும், கட்சி, மற்றும் கூட்டணி பலத்தாலும் வெற்றி பெற்ற ஜெகத்ரட்சகன் அந்த தொகுதிக்கோ, தமிழ்நாட்டிற்கோ எந்த நன்மையையும் செய்ததில்லை.

**ஜெகத்ரட்சகனின் அக்கார்டு நட்சத்திர ஹோட்டல்!**

இடைப்பட்ட காலத்தில் பாண்டிச்சேரி முதலமைச்சராக ஆவதற்கு காய் நகர்த்தினார் ஜெகத்ரட்சகன். ஆனால், பாண்டிச்சேரி அரசியல்வாதிகளை விலைபேசி வந்த பாஜக, இவருக்கு எச்சரிக்கை தந்தவுடன் அப்படியே ‘ஜகா’ வாங்கிவிட்டார். பாஜகவின் மதவாத அரசியலுக்கு எதிராக துரும்பைக் கூட கிள்ளிப் போடாதவர் ஜெகத்ரட்சகன். ஏனென்றால், ஒரு மிகப் பெரிய கார்ப்பரேட்ரானவர் அதிகார மையத்துடன் இணக்கம் பாராட்டவிட்டால் இல்லாமலாக்கப்படுவார் என்பதே அரசியல் மற்றும் வணிகத்தின் பாலபாடமாகும். ஆகவே, ஜெகத்ரட்சகனை பொறுத்த வரை திமுக தலைமை குடும்பத்திற்கு மிக நெருக்கம் என்றாலும், பாஜகவின் மேல்மட்டத்துடன் மிக இணக்கமாகவே இருந்து வந்துள்ளார்.

எனினும், பாஜகவின் அழித்தொழிப்பு அரசியலில் ஈவு, இரக்கம் என்பதே கிடையாது. திமுகவை ஒழிக்க அதன் கஜானாக்களாக அறியப்படுபவர்களை ஒருவரை அடுத்து ஒருவராக ரெய்டு செய்து வருகின்றனர்.

அந்த வகையில் அவர்கள் முதலில் டார்கெட் செய்தது ஸ்டாலின் மருமகன் சபரீசனை! அவரது ரியல் எஸ்டேட் நிறுவனமான ஜீ ஸ்கொயர் திமுக ஆட்சிக்கு வந்த மிகக் குறுகிய காலகட்டத்தில் பல்லாயிரம் கோடிகள் ஈட்டியதை மோப்பம் பிடித்து ரெய்டு செய்தனர். ஆனால், எந்த உருப்படியான நடவடிக்கையும் இல்லை. என்ன பேரம் நடந்ததோ? அதற்கு பிறகு செந்தில் பாலாஜியை தூக்கினார்கள். அதிலும் கூட அவரது தற்போதைய டாஸ்மாக் மதுபான முறைகேடுகளை அம்பலப்படுத்தாமல் பழைய முறைகேட்டை மட்டுமே விசாரிப்பது போல போக்கு காட்டினர்.

அதற்கு பிறகு தமிழக இயற்கை வளங்களை சுரண்டிக் கொழுக்கும் மணல் மாபியாக்களை ரெய்டு செய்தனர். அந்த மணல் மாபியாக்களை டீலிங் செய்து கொண்டிருக்கும் அமைச்சர் துரைமுருகனையோ, சபரீசனையோ விசாரணை வளையத்திற்கே கொண்டு வரவில்லை. ஆனால், அது எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம்.

தற்போது ஜெகத்ரட்சகன் சம்பந்தப்பட்ட 70 இடங்களில் சோதனை நடத்திய வருமான வரித்துறை மற்றும் அமலாக்கத் துறையினர் வழக்கம் போல கமுக்கமாக இருப்பதைப் பார்த்தால், இவர் முறைகேடாக சேர்த்துள்ள சொத்துக்களுக்காக தண்டிக்கப்படுவார் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை. ஏதோ ஒரு பேரம் நடக்கும் என்றே தோன்றுகிறது. அது பொருளாதார பேரமா? அல்லது அரசியல் பேரமா? என்பது விரைவில் தெரிய வரும்.

சாவித்திரி கண்ணன்
அறம் இணைய இதழ்

---

**குறிப்பு:- தவிர்க்க முடியோத காரணங்களால் இந்த இதழிலும் தலைவர் மடல் பிரசுரிக்க முடியவில்லை..**

மனுதாரருக்கு முறையாக தகவல் அளிக்காத

# கோட்டாட்சியர், தனி வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ₹10,000 அபராதம்

இளையான்குடி, அக். 21: சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அருகே சாலைக் கிராமத்தை சேர்ந்த தகவல் அறியும் உரிமை சட்ட ஆர்வலர் ராதாகிருஷ்ணன். இவர் இளையான்குடியில் நீர்நிலை ஊருணி ஆக்கிரமிப்புகள் குறித்து தகவல் கேட்டு ஓராண்டுக்கு முன்பு, நாட்டரசன்கோட்டையில் உள்ள மனை வாடகை பிரிவு வருவாய் பின் தொடர் பணி தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்திருந்தார்.

அதற்கு முறையான பதில் அளிக்காத நிலையில் நில அளவைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கும் முறையான தகவல் அளிக்காததால் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தார்.

இது தொடர்பாக மாநில தகவல் ஆணையம், சிவகங்கை கோட்டாட்சியர் விசாரித்து உரிய தகவல்களை அளிக்க உத்தரவிட்டது. ஆனால் அதன் பின்னரும் உரிய தகவல்களை அளிக்கவில்லை. இதையடுத்து ராதாகிருஷ்ணன் மீண்டும் தகவல் ஆணையத்தில் முறையீடு செய்தார். இதுகுறித்து விசாரணை செய்த மாநில தகவல் ஆணையர் ஸ்ரீதர், முறையாக தகவல் அளிக்காத சிவகங்கை கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் நாட்டரசன் கோட்டை மனை வாடகை பிரிவு வருவாய் பின்தொடர் பணி தனி வட்டாட்சியர் அலுவலகத்துக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். மேலும் மனுதாரருக்கு 30 நாட்களுக்குள் உரிய தகவல்களை அளிக்க மாவட்ட வருவாய் அலுவலருக்கு உத்தரவிட்டார்.

# 'Super rich' incomes' share ebbing amid middle-class mobility: CBDT

The Hindu Bureau
NEW DELHI

India's tax base has widened sharply since 2013-14, with individuals moving up the income ladder and the proportion of super-rich taxpayers' incomes declining, the Central Board of Direct Taxes (CBDT) said on Thursday, days after the Congress cited income tax data to show widening income inequality in the country.

The overall number of income tax (I-T) returns filed by individuals has risen from 3.36 crore to 6.37 crore through assessment years 2013-14 to 2021-22, while there is also an increase in number of returns filed by individual taxpayers across various ranges of gross total income, the CBDT said in a statement.

"In the range of gross total income up to ₹5 lakh, the number of returns filed by individual taxpayers has increased from 2.62 crore in AY 2013-14 to 3.47 crore in AY 2021-22, registering an increase of 32%. This range of income includes individuals having income below taxable limit who may not be filing returns," the board pointed out.

For higher income ranges of ₹5 lakh to ₹10 lakh, and ₹10 lakh to ₹25 lakh, the number of individual returns filed surged 295% and 291% over the period, respectively. "This indicates that individual taxpayers are showing a positive trend of migration to higher range of gross total income," the CBDT said.

Digging deeper into the data reveals that the proportionate contribution of gross total income of top 1% individual taxpayers vis-à-vis all individual taxpayers has decreased from 15.9% to 14.6%, the board said, while the share of the bottom 25% taxpayers increased from 8.3% to 8.4% over the same period.


"The proportion of gross total income of middle 74% group of individual taxpayers increased from 75.8% to 77% in the above period," the statement said, adding that the average gross total income for individual taxpayers increased from about ₹4.5 lakh to about ₹7 lakh over the nine-year period, representing an increase of 56%.

"The increase in average gross total income for top 1% individual taxpayers is 42% while that for bottom 25% individual taxpayers is 58%," it added.

The data indicates "robust growth in the gross total income of individuals across different income groups subsequent to AY 2013-14", the board said, adding this was reflected in the increase in net direct tax collections from ₹6.38 lakh crore in 2013-14 to ₹16.61 lakh crore in 2022-23.

Marginal shift in contributions

There has been a subtle change in the gross total income contributions among individual taxpayers




ராமநாதபுரத்தில்

# வசூல் பணத்தை பஸ் நிலையத்தில் வாங்கிய பெண் சார்பதிவாளர் சிக்கினார்

## அதிரடி வேட்டையில் ரூ.12 லட்சம்- ரூ.1 கோடி ஆவணங்கள் பறிமுதல்

ராமநாதபுரம், அக்.21-

புரோக்கர்களிடம் இருந்து வசூல் பணத்தை ராமநாதபுரம் பஸ் நிலையத்தில் வைத்து வாங்கிய பெண் சார்பதிவாளர், லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் சிக்கினார். தொடர்ந்து அவரது வீடு, அலுவலகங்களில் நடந்த சோதனையில் மொத்தம் ரூ.12 லட்சம் மற்றும் ரூ.1 கோடி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.



பெத்துலட்சுமி

### ரகசிய கண்காணிப்பு

ராமநாதபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர கட்டணம்போக பத்திரத்தின் தன்மைக்கு ஏற்பவும், சொத்தின் மதிப்பிற்கும் ஏற்பவும் கூடுதல் தொகையை லஞ்சமாக பெறுவதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து சார்பதிவாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையிட முடிவு செய்தனர்.

இது தொடர்பாக விசாரித்த போது சார்பதிவாளர் பெத்துலட்சுமி, லஞ்சப்பணத்தையும், புரோக்கர்களிடம் வசூலாகும் பணத்தையும் அலுவலகத்தில் வைத்து வாங்கினால் சிக்கிக்கொள்வோம் என்று பஸ் நிலையத்திற்கு வரவழைத்து பெறுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து லஞ்ச ஒழிப்பு போலீசார், ராமநாதபுரம் பஸ் நிலையத்திற்கு சென்று ரகசியமாக கண்காணித்தனர்.

### விடிய, விடிய விசாரணை

அப்போது ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்களிடம் பணத்தை பெற்று சார்பதிவாளர் பெத்துலட்சுமி பஸ்சில் ஏற முயன்றார். இதை கவனித்த லஞ்ச ஒழிப்புதுறையினர் அவரை மடக்கி பிடித்து சோதனையிட்டனர். அதில் அவரிடம் வசூல் பணம் இருப்பதை உறுதி செய்தனர். பின்னர் அவரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து வந்து நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணையின் போது பெத்துலட்சுமியிடம் இருந்து கணக்கில் வராத ரூ.1 லட்சத்து 84 ஆயிரத்து 500 பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் பரமக்குடியில் உள்ள அவரது வீட்டிலும் அதிகாரிகள் அதிரடியாக சென்று தீவிர சோதனை நடத்தினர்.

### ரூ.12 லட்சம், ரூ.1 கோடி ஆவணம்

இந்த சோதனையின்போதும் கட்டுக்கட்டாக பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. மொத்தம் ரூ.12 லட்சத்து 800 மற்றும் ரூ.1 கோடி மதிப்பிலான சொத்து பத்திர ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக பெத்துலட்சுமியிடம் லஞ்ச ஒழிப்புபோலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அளிக்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

தினமலர் கோவை
www.dinamalar.com
கோயம்புத்தூர்
வெள்ளி • அக்டோபர் 27

# தரமற்ற தார் ரோடு மூவருக்கு 'மெமோ'

கோவை, அக். 27-

கோவையில் தரமின்றி ரோடு போட்டதற்காக, மாநகராட்சி அதிகாரிகள் மூவருக்கு நேற்று 'மெமோ' வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு, கூட்ஸ் ஷெட் ரோட்டில், 800 மீட்டர் நீளத்துக்கு, ரூ.1.10 கோடியில் புதிதாக ரோடு போடும் பணி மேற்கொள்ளப்பட்டது. பழைய ரோட்டை தோண்டி எடுக்காமல், லேசாக 'மில்லிங்' செய்து விட்டு, தார் ரோடு போடப்பட்டது.

இத்தகவல், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் கவனத்துக்கு சென்றது.

நேற்று முன்தினம் இரவு, 11:00 மணி அளவில், அப்பகுதிக்கு நேரில் சென்று அவர் ஆய்வு செய்தார்.

புதிதாக போடப்படும் ரோட்டின் நீளம், அகலம், தார் கலவை வெப்ப அளவு உள்ளிட்டவற்றை ஆய்வுக்கு உட்படுத்தினார். ஒரு மணி நேரம் அங்கேயே இருந்து, தரமாக ரோடு எப்படி போடுவது என்பது குறித்து, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு கற்றுக் கொடுத்தார்.

நேற்று காலை, 8:00 மணிக்கு அதே பகுதிக்கு கமிஷனர் மீண்டும் சென்று ஆய்வு செய்தார். ஜல்லிக் கற்கள் மீது ரோலர் இயக்கி, 'காம்பேக்ட்' செய்யாமல் இருந்தது. ஆங்காங்கே கற்கள் பெயர்ந்து கிடந்தன.

அவர் சொல்லிக் கொடுத்தது போல், தார் ரோடு போடாததால், கோபமடைந்த கமிஷனர், ஒப்பந்த நிறுவனமான, 'விஷ்ணு இன்ப்ரா' நிறுவனத்துக்கு அபராதம் விதிக்க உத்தரவிட்டார்.

இப்பணியை கள ஆய்வு செய்து, தரத்தை உறுதி செய்யாத குற்றத்துக்காக, உதவி பொறியாளர் பர்மான் அலி, உதவி நிர்வாக பொறியாளர் பிரபாகரன், நிர்வாக பொறியாளர் கருப்பசாமி ஆகியோருக்கு 'மெமோ' கொடுக்க, கமிஷனர் உத்தரவிட்டார்.

## ரேஷன் அரிசி கடத்தியவருக்கு குண்டாஸ்

போத்தனூர், அக். 27-

மதுக்கரை, குவாரி ஆபீஸ் அருகே கடந்த மாதம், 14ம் தேதி பொள்ளாச்சி குடிமை பொருள்



## மன்னீஸ்வரர் கோவிலில் நாளை அன்னாபிஷேக

அன்னூர், அக்

அன்னூர் மன்னீ கோவிலில் நாளை னாபிஷேகம் நடை கிறது.

ஐப்பசி மாதம் பவு நாளன்று சிவபெரும அன்னத்தால் அலங் வழிபாடுசெய்தால்,ந செல்வம் செழிப்பு டாகும்.

தொழில் வளம் கும். குடும்பத்தில் மேம்படும்.

அன்னூர் மன் கோவிலில் நாளை 12:00 மணிக்கு, க யும், அபிஷேக நடக்கிறது. மால மணிக்கு மன் அன்னத்தால் கப்பட்டு, அலங் நடக்கிறது.

அன்னாபிஷே பங்கேற்க வி வினர் அழைப்பு ளனர்.

'சந்திர கி முன்னிட்டு, அ 7:00 மணிக்கு நடை மூடப்ப நிர்வாகிகள் ளனர்.

# Banking sector wrote off ₹14.56 lakh cr NPAs in 9 yrs

## Net recovery among PSBs fell to ₹0.84 lakh cr in 2022-23 fiscal from ₹0.91 lakh cr in FY22 and ₹1.18 lakh cr in FY18;

NEW DELHI

BANKS have written off bad loans worth Rs14.56 lakh crore in the last nine financial years starting 2014-15, Parliament was informed on Monday.Out of the total Rs14,56,226 crore, written off loans of large industries and services stood at Rs7,40,968 crore. Scheduled Commercial Banks (SCBs) have recovered an aggregate amount of Rs2,04,668 crore in written-off loans, including corporate loans, since April, 2014 and up to March 2023, Minister of State (MoS) for Finance Bhagwat Karad said in a written reply to Lok Sabha.

Loans written-off during the financial year, net of recovery in written-off loans during the financial year (net write-off) in public-sector banks (PSBs) was Rs1.18 lakh crore in the financial year (FY) 2017-18, which has declined to 0.91 lakh crore in FY 2021-22 and to Rs0.84 lakh crore (RBI provisional data) in FY2022-23, he said in another reply.

Net write-off loans by privatesector banks stood at Rs73,803 crore (RBI provisional data) in FY 2022-23, he said. Net write-off as percentage of opening gross loans and advances in private sector banks was 1.25 per cent and 1.57 per cent in FY 2017-18 and FY 2022-23 respectively, and it was 2 per cent and 1.12 per cent for PSBs during the same period.

Comprehensive steps have been taken by the government and RBI to recover and to bring down NPAs, enabled by which, gross NPAs of PSBs have declined to Rs4.28 lakh crore as on March 31, 2023, from Rs8.96 lakh crore as on March 31, 2018, he said.

Talking about various steps taken by the government, he said, the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (SRFAESIA) has been amended to make it more effective. The pecuniary jurisdiction of debt recovery tribunals (DRTs) was increased from Rs10 lakh to Rs20 lakh to enable the DRTs to focus on high-value cases, resulting in higher recovery for the banks and financial institutions, the minister said.

In addition, he said, National Asset Reconstruction Company Limited (NARCL) has been set up as an asset reconstruction company with an aim to resolve stressed assets above Rs500 crore each.

**RECOUPING DEBT**

- Govt amends SRFAESI Act to make it more effective
- DRTs' jurisdiction widened from Rs10 lakh to Rs20 lakh
- DRTs now focusing on high-value cases
- It's resulting in higher recovery for banks and FIs










A Mexican parliamentarian gets rapped by The President for being shamelessly naked. He replied this " are you not ashamed of stripping the country naked by offering freebies and in the process looting taxpayers money



Spread this ... Gives a very good pic to all politie all parties supporting votes for subsidies n freebies....



Tamil Nadu

# ED ropes in ISRO, IIT-Kanpur to probe illegal sand mining

29.10.2023 / The Hindu

The Central agency has sought the support of scientists to assess the area and quantum of sand mined along riverbeds in the State

S. Vijay Kumar
CHENNAI

The Directorate of Enforcement (ED) has roped in experts from the Indian Space Research Organisation (ISRO) and the Indian Institute of Technology-Kanpur (IIT-K) to assist in its ongoing investigation into allegations of excessive sand mining in Tamil Nadu, official sources said on Sunday.

Investigators from the ED have sought the support of scientists of ISRO and IIT-K to assess the area and quantum of sand mined along riverbeds in the State. As part of the probe into allegations that a huge quantity of sand was excavated in violation of environmental clearance norms and sold illegally to sand lorry owners without any record, evading taxes, the ED registered a case under the Prevention of Money Laundering Act and searched designated sand mining sites in six districts on September 12, 2023.

After the searches, which lasted for about three days, the Central agency had seized incriminating documents, including fake receipts and counterfeit QR codes, that pointed to irregularities in the sale of sand. Investigators also seized storage devices of CCTV footage and hard disc from computers used for entering data of transactions at sand stockyards.

The ED had also sought data on the quantity of sand mined and sold in the last two years.

## Satellite images

The sources further said that ISRO was in the process of providing satellite images of the sites over a period of time, based on coordinates made available by the investigating agency. The images will help in assessing the depth of sand mined, which experts from IIT-Kanpur would use to measure the quantum.

The scientific investigation will help the ED calculate the quantum of sand mined, assess the quantity mined illegally and the corresponding loss to the exchequer, the sources added.

Meanwhile, a top official in the Water Resources Department – Engineer-in-Chief and Chief Engineer General A. Muthiaya – who had sought details on illegal sand mining from senior engineers in-charge of sand mining and sale in the State, has gone on leave. Another official has been given charge of his position, the sources said.

ISRO is in the process of providing satellite images of the mining sites, say sources. FILE PHOTO


இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- நவன்பர்2023

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச் செயலாளர் : ஜி கோவிந்தசாமி:

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Nov 2023
Due to corona published online)

அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது. காவல்
குழவி கொள்பவரின், ஓம்புமதி
- நரிவெரு உத்தலையார்

பெறுநர்

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

**Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI** and published through online on its behalf of **Thiru Govindasamy** (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai - 600023 and printed by **Thiru G Parthasarathy at VPS PRINTERS**, No 292, TH Road, Chennai-600005; Editor: **Thiru V.Karthikai Rajan (8778312823)**